1989 ஏப்ரல் 20]

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நரிமணம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காக மொத்தம் எவ்வளவு நிலம் தேவைப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இப்பொழுது உருவாக இருக்கின்ற இந்தத் தொழிற்சாலைக்காக 500 ஏக்கரா நிலம் தேவைப்படும் என்று அறியப்படுகிறது.

தென்காசி பஸ் நிலைய விரிவாக்கப் பணியில் கால தாமதம்.

84—(*வினா எண் 209) திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி பஸ் நிலைய விரிவாக்கப் பணிகளில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனை விரைவாகச் செயல்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தற்போதுள்ள பேருந்து நிலையம் போதுமானதாக இல்லாததாலும், அதை விரிவுபடுத்த அருகில் உள்ள நிலத்தை கையகப்படுத்த இயலாததாலும், தென்காசி—மதுரை சாலையிலுள்ள வேறு ஒரு இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நகராட்சி மன்றம் முடிவு செய்துள்ளது. இதற்கான நிலத்தைக் கையகப்படுத்த நகராட்சியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(முற்பகல் 9-10)

தென்னடார் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டும் வேலை.

85—(*வினா எண். 2106) திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரணியம் தொகுதி தென்னடார் கிராமத்தில் ஆர். எல். இ. ஜி. பி. திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டும் வேலை முடிக்கப்படாததால் ஆதி திராவிட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?